1969 மார்ச் 28]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியாக எழுதி அனுப்பினால் பரிசீலிக்கப்படும்.

அணைக்கட்டுகள்

***525 வினா.—திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், அந்தியூர் தொகுதியில் வழுக்குப்பாறை என்னும் பள்ளத்தின் மேல், செல்லம்பாளையம் கிராமத்துக்கு பக்கத்தில் அணை கட்டும் திட்டம் ஏதாவது உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (அ) & (இ) எண்ணமங்கலம் கிராமத்திற்கு அருகில் வழுக்குப்பாறை பள்ளக் குறுக்கே நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டும் செயற்குறிப்பு (பாசனத்) தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது. அதன் விவரம் இன்னும் இறுதி செய்யப்படவில்லை

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதிலளிக்கையில் இந்தத் திட்டம் ஆய்வில் உள்ளது என்று கூறினார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் எவ்வளவு ஏக்கராக்களுக்குப் பாசன வசதிகள் கிடைக்கும்? இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 750 ஏக்கர் புதிய பாசனத் திட்டம், 977 ஏக்கர் பாசன ஊர்ஜிதப்படுத்துவதற்கு. மொத்தம் 1,860 ஏக்கர். இதன் உத்தேசச் செலவு ரூ. 25 இலட்சம்.

***526 வினா.—திரு. ஏ. எம். இராஜா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், அந்தியூர் தொகுதியில் ஓடும் வறட்டுப் பள்ளத்தில் மேல் எண்ணமங்கலம் கிராமத்திற்கு பக்கத்தின் அணை கட்டும் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) செயற்குறிப்பில் குறிப்பிட்டுள்ள அணை, 2,089 ஏக்கர் அடங்கிய புதிய ஆயக்கட்டிற்குப் பாசன வசதியளிக்கும். இதற்கு ரூபாய் 40·90 லட்சம் செலவு ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது பொதுப்பணித் துறையின் உள்ளூர் அதிகாரிகளால் ஆராயப்பட்டு வருகிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இந்த அந்தியூர் பகுதி மிகவும் வறண்ட பகுதியாக இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அங்கு கோடைகாலத்தில் குடிப்பதற்குக்கூட தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப் படவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்த இரண்டு திட்டங்களை யும் விரைவாக செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

செங்கத்திற்கு வடக்கே செய்யாற்றின் குறுக்கே பாலம்

*** 527 வினா.—திரு. பி. எஸ். சந்தானம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) வட ஆற்காடு மாவட்டம், செங்கம் வட்டம், செங்கம் கிராமத் திற்கு வடக்கே செல்லும் செய்யாற்றின் குறுக்கே பாலம் கட்ட சர்க்கார் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

(இ) அப்படி எடுக்கவில்லையெனில், சர்க்கார் இது குறித்து ஆவன செய்யும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) மத்திய சாலை நிதி உதவி கொண்டு பாலம் கட்டும் வேலையை மேற்கொள்வதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. எஸ். சந்தானம் : தலைவர் அவர்களே, அத்தகைய பரிசீலனை எவ்வளவு காலத்திற்குள்ளாக செயல்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எவ்வளவு சீக்கிரமாகச் செய்யலாமோ அவ்வளவு சீக்கிரம் செய்யப்படும்.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, இப்பொழுது அங்கு அந்த ஆற்றைக் கடகக வேண்டுமானால் வண்டிகளும் மற்றவைகளும் ஆற்றிலே இறங்கித்தான் செல்ல வேண்டி இருக்கிறது. அடிக்கடி ஆற்றிலே வெள்ளம் வருகின்றபொழுது மிகவும் ஆபத்தான நிலைமை ஏற்படுகிறது. எனக்கே கூட அதைக் கடக்கிறபொழுது அந்த அனுபவம் ஏற்பட்டது. அந்த நிலைமையை மனதில் கொண்டு இந்த மழைக் காலத்திற்குள் வேலையையும் தொடங்குவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினரைப் போல் எல்லோரும் அந்த திட்டத்தைப் பற்றிச் சொன்னதால் அந்த திட்டம் ஆராயப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. சகாதேவக் கண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே தற்போதுள்ள முதலமைச்சர் அவர்கள் அங்கே விஜயம் செய்தபோது பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்தார்கள். அந்த நேரத்திலே உடனடியாக நான் பார்த்து செய்வேன் என்ற வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காகவும் பஞ்சத்தைப் போக்கவும் நிவாரணமாக இந்த ஆண்டிலே, மழைக் காலத்திற்குள்ளே அதை ஆரம்பிக்க சர்க்கார் முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்த வாக்குறுதியின் அடிப்படையில் தான் வேலைகள் விரைவாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

லாரி ஓட்டுநருக்குச் சம்பள விகிதம்

*528 **வின.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) சென்னை கார்ப்பொரேஷனில் வேலை செய்யும் லாரி டிரைவர்களுக்கும், மற்ற நகர சபையில் **(Municipalities)** வேலை செய்யும் லாரி டிரைவர்களுக்கும் அடிப்படைச் சம்பள விகிதத்தில் வித்தியாசம் உண்டா?

(இ) ஆம் எனில், அதனை ஒருமுகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) உண்டு. மாநகராட்சியில் லாரி ஓட்டுநருக்கு மாத அடிப்படை சம்பளம் ரூ. 90—4—110—5—140. நகராட்சிகளில் ஓட்டுநருக்கு மாத அடிப்படை சம்பளம் (கனமான வண்டிகளுக்கு) ரூ. 75—1—85 ; (இலேசான வண்டிகளுக்கு) ரூ. 70—1—80.

(இ) இல்லை.